Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 65/2012**

**Deposition of witness for: PW - 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மங்கையர்கரசி | **Father/Husband Name** | : | ராஜா சந்திரசேகர் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **23.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் அரசு மருத்துவராக பணியாற்றி 2024ம் ஆண்டு ஓய்வு பெற்று தற்போது மதுரை யாகப்பா நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 03.12.2011ம் தேதியன்று மேலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அன்று இரவு 10.10 மணியளவில் 55 வயது மதிப்புடைய தனபாக்கியல் க/பெ,நல்லுசாமி, கொன்னைபட்டியை சேர்ந்த அவரை அவரது மகன் ஜெயராஜ் என்பவரால் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். தனபாக்கியம் அவர்கள் தன்னை 03.12.2011 அன்று இரவு 07.30 மணியளவில் கொன்னைப்பட்டி மந்தையில் வைத்து தனக்கு தெரிந்த 5 பேர் கல் மற்றும் கம்பால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் அவர் அரை மயக்க நிலையில் இருந்தார். அவரது பேச்சு தேவையற்ற பேச்சாக இருந்தது. ஆகையால் அவரது மனநிலையை கருத்தில்கொண்டு அவரை உயர் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் அங்கு உள்நோயாளியாக

03.12.2011 முதல் 07.12.2011 வரை சிகிச்சையில் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள்தான் என்று சான்று வழங்கினேன். **( நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**. மேற்சொன்னவாறு சுமார் 5 நபர்ளோ, அல்லது அதற்கு மேல் நபர்களோ கல் மற்றும் கம்பால் தாக்கினால் நான் சொன்னவாறு காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2 முதல் 7 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி இறந்துபோய்விட்டதால் அவருக்கு எதிரான குற்ற சாட்டு அற்றுபோய்விட்டது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

மேற்கூறிய காயங்கள் வாகன விபத்திலும் ஏற்படும் என்றால் நான் பார்த்தபோது வெளிபுற காயங்கள் இல்லை. நான் கேட்டபோது காயம்பட்டவர் 5 பேர்தாக்கியதாக சொன்னார் என்றால் சரிதான், தெரிந்த 5 நபர்கள் என்றார். நான் சிகிச்சை செய்தபோது காயம்பட்டவர் சரியான மனநிலையில் இல்லை என்றால் சரிதான், அரை மயக்கநிலை தேவையற்ற சம்மந்தம் இல்லாமல் பேசினார்.